Register as a N
paper eylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே

புத். ருரு ] யாழ்ப்பாணம்:—சுபானு ஹு புரட்டாதிமீ உஅவ (1943 அக்ரோபர்மீ 14 வியாழக்கிழமை) [இல. ருரு

## கிழக்குக்கரையோரமாகச் சத்துருவிமானம் நாசம்!

### வெடிகுண்டுகள் வீசப்படவில்லை

சத்துரு விமானமொன்று சென்ற திங்கட்கிழமை இரவு இலங்கையின் கிழக்குக்கரையை நெருங்கியதென்றும் அது வெடிகுண்டுகளை வீசுமுன் நாசமாக்கப்பட்டதென்றும் பிரதம தளகர்த்தர் செவ்வாய்க்கிழமையன்று பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்று கூறுகிறது.

சென்ற சில மாதங்களில் இருமுறை சத்துரு விமானங்கள் இலங்கையை நெருங்கியதுண்டு. சென்ற செப்டம்பர் மாதம் 20-ம் திகதி அதிகாலை எதிரி விமானமொன்று கொழும்புக்குச் சமீபத்தில் வரக் காணப்பட்டது. அப்பொழுது அபாயச் சங்குகள் சப்திக்கப்பட்டன. நமது படைகள் நடவடிக்கையெடுக்குமுன் அவ்விமானம் பறந்துவிட்டது.

ஜூலை மாதம் 10-ம் திகதியன்றும் ஒரு விமானம் கிழக்குக்கரையை அணுகிவிட்டது. உடனே விமானவீழ்த்திப் பீரங்கிகள் பிரயோகிக்கப்பட்டன.

குறித்த இரு முறைகளிலும் குண்டுகள் வீசப்படவில்லை.

---

## சென்னையை நோக்கிவந்த பகைவர் விமானம்

### குண்டுகள் வீசப்பட்டன; சேதம் மிகக் குறைவு

புதுடில்லி அக் 12

"வேவுபார்க்கும் ஒரு சத்துரு விமானம் நேற்றிரவு சென்னையை நோக்கி வந்து சில குண்டுகளை வீசிற்று. இராணுவச்சேதம் ஒன்றுமில்லை. சொற்ப உயிர்ச்சேதம் ஏற்பட்டது" என்று இந்திய அதிகாரபீடக் கூட்டறிக்கை அறிவிக்கிறது. ஆர். ஏ. எப். விமானங்களும் அமெரிக்க விமானங்களும் பர்மாவில் அநேக நடவடிக்கைகள் நடத்தின என்றும் அவ்வறிக்கை கூறுகிறது.

---

## ஹிட்லரைப் பிடிப்பவருக்குவெகுமதி

### அளிப்பதாகக் கூறியவர் அவ்வுலகஞ் சென்றார்

பிட்ஸ்பேர்க் அக் 11

ஹிட்லரைக் கைது செய்பவருக்கு 10 லட்சம் டாலர்கள் வெகுமதியளிப்பதாக 1940ம் ஆண்டு மேமீ பிரகடனஞ் செய்த மிஸ்றர் சாமுவேல் ஹார்டன் சர்ச் இன்று காலமானார். அவர் கார்னகி ஸ்தாபனத்தின் தலைவராவர்.

---

## பண்டாரவளை உபதேர்தல் முடிவு

பதுளை, அக் 12

பண்டாரவளை அரசாங்கசபைத் தொகுதிக்கு நடந்த உபதேர்தலின் முடிவுகள் இன்று பதுளை கச்சேரியில் அறிவிக்கப்பட்டன.

ஸ்ரீ ஜே. ஜி. ராஜகுலேந்திரன் தேர்தலில் வெற்றிபெற்றார்.

## நாஜியரின் புதிய இரகசிய ஆயுதம்

### சத்தத்தால் வெடிக்கும் டோப்பிடோக் குண்டு

லண்டன் அக் 10—

ராய்ட்டரின் கடற்படை நிருபர் எழுதுவதாவது:—

அட்லாண்டிக் சமுத்திரத்தில் ஜெர்மானியர் சமீபத்தில் நடத்திய பெரும் நீர்மூழ்கித் தாக்குதலில ஜெர்மானியர் புதிய காந்த டோப்பிடோக் குண்டை உபயோகித்தனரென்று அறிவிக்கப்படுகிறது.

இந்த இரகசிய ஆயுதத்தைப்பற்றி இதுவரை ஒன்றும் வெளியிடப்படவில்லை. இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கும் தகவல்களிலிருந்து இப்புதிய டோப்பிடோக் குண்டு கப்பலின் அடிப்பாகத்திலுள்ள எஃகிலிருக்கும் மின்சாரத்தால் ஆகர்ஷிக்கப்பட்டுக் கப்பலை இயக்கும் சக்கரத்தின் சத்தத்தினால் வெடித்து விடுகிறதென்று தெரிகிறது.

தாக்கப்படும் கப்பலின் திசை மாறுமானல் டோப்பிடோவிலுள்ள இயந்திரம் கப்பலிலிருந்து வரும் காந்தசக்தியால் தாக்கப்பட்டு, டோப்பிடோவின் போக்கிலும் மாற்றம் ஏற்படுகிறது. இதற்கெதிராக, நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளக், கடற்படை நிபுணர்கள் முயன்றுவருகின்றனரென்று நாம் திடமாக நம்பலாம்.

---

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சைவ வாலிபர் சங்கம்

நமதுசங்கத்தார் 13-11.43 சனிக்கிழமை கொண்டாடவிருக்கும் நாவலர்படத் திறப்பு விழாவை முன்னிட்டு 6-11-43 சனிக்கிழமை காலை 10 மணிக்கு எங்கள் கல்லூரி மேல் மாடியில் ஓர் சொற்பொழிவுப்போட்டி நடாத்தப்படும். யாழ்ப்பாணத்திலுள்ள எப் பள்ளிக்கூட மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.

நிபந்தனைகள்.

கீழ்க்கண்ட பொருள்களில் ஒன்றைப்பற்றி 8 நிமிஷங்களுக்கு மேற்படாமல் பேசுதல் வேண்டும். 1. நாவலரும் தமிழும், 2. நாவலரும் சைவமும், 3 நாவலர் வாழ்க்கை.

போட்டி முடிவு அறிவாற்றலிற் சிறந்த ஓர் குழுவினரால் நிர்ணயிக்கப்பட்டு, 13-11-43 சனிக்கிழமை மாலை நிகழும் பகிரங்கக் கூட்டத்தில், முதலாம், இரண்டாம், மூன்றும் பரிசுகள் வழங்கப்படும்.

பங்குபற்றும் மாணவர்கள் 1-11-43க்கு முன்னர்க் கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

இங்ஙனம்,
அ. ந. கந்தசாமி,
ஷெ சங்கச் செயலாளர்.

---

வாக்குகள் விபரம்

| | |
|---|---|
| ஸ்ரீ ஜே. ஜி. ராஜகுலேந்திரன் | 8663 |
| ஸ்ரீ கெ. டொன் சுபதாஸ | 6631 |
| ஸ்ரீ திவிடொட்டவில | 6056 |
| ஸ்ரீ கே. எஸ். ஐயர் | 528 |

## கள்ள விற்பனையைத் தடுக்கப் புதியமுறை

### காட்டிக் கொடுப்போருக்கு அபராதத்தில் ஒருபங்கு வெகுமதி

கள்ள விற்பனையில் எடுக்கப்பட்டுக் கொள்ளைலாபம் சம்பாதிப்பவர்களைக் கண்டுபிடிப்பதற்குப் புதிய முறையொன்றை அதிகாரிகள் ஏற்படுத்தியிருக்கின்றனர். கொள்ளைலாப விற்பனைக்காரரைக் கண்டுபிடிக்கத் தகவல் தெரிவித்து உதவுவோருக்குக் கொள்ளைலாப விற்பனைக்காரர் செலுத்தும் அபராதத்தில் ஒரு பகுதியைக் கொடுப்பதே குறித்த முறையாகும்.

இப்படிச் செய்யும் பட்சத்தில் அநேகர் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய வெகுமதியை உத்தேசித்து அதிகாரிகளுக்குத் தகவல் செய்ய முன்வருவரென்று கருதப்படுகிறது.

தகவல் தெரிவிப்பவர்களுக்குப் பொது வருமானத்திலிருந்து வெகுமதிகளைக் கொடுப்பதைக்காட்டிலும் சம்பந்தப்பட்ட வழக்குகளில விதிக்கப்படும் அபராதங்களில ஒரு பகுதியைக் கொடுப்பதே உசிதமாகுமென்று கருதப்படுகிறது.

### தாமதமின்றி வழங்குதல்

ஒருவர் மற்றொருவர் தெரிவிக்கும் தகவல் காரணமாகத் தண்டிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட அபராதத்தில் பாதிக்கு மேற்படாத ஒரு தொகையை வெகுமதியாக வழங்கும்படி வழக்குத் தொடரும் அதிகாரி உடனுக்குடனே கோட்டில மனுச்செய்வார்.

தகவல் தெரிவிப்பவர்கள் சம்பந்தப்பட்டவரை இப்பொழுது நடையிலிருந்துவரும் முறையைவிடப் புதியமுறை திருப்திகரமாகவிருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்போதைய முறையினபடி வெகுமதியின் தொகையைத் தீர்மானிப்பதற்கு அதிக காலமாவதோடு வழங்கப்படும் தொகையும் போதியதல்லவென்று குறிப்பிடப்படுகிறது.

புதியமுறை நடைக்குக் கொண்டுவரப்பட்டால் இப்போதையை விடக் கூடுதலானவர்கள் நம்பிக்கையான தகவல் தெரிவிக்க முன்வருவரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### வசதிக் குறைவுகள்

சிற்சில காரணங்களை உத்தேசித்துப் பொதுசனங்கள், கொள்ளைலாப விற்பனைபற்றித் தகவல் தெரிவிக்க முன்வருவதில்லையென்று கூறப்படுகிறது. சிலர் கோட்டுக்கு வர நேரமில்லாமையாற் பேசாமல விட்டுவிடுவதுமுண்டு. மற்றுஞ் சிலர் சிற்சில சமயங்களில் கோட்டுக்குச்செல்லுஞ் செலவுகளை உத்தேசித்தும தங்கள், சொந்தவேலை பாதிக்கப்படுவதை உத்தேசித்தும தகவல் தெரிவிக்கத் தயங்குவதாகக் குறிப்பிடப்படுகிறது.

## பர்மிய நதியைக் கடக்க முயற்சி

### ஜப்பானின் கூற்று

டோக்கியோ, அக், 11—

பர்மாவில் மாங்டாங்குக்கு அருகேயுள்ள சிந்த்வான் நதியைக் கடக்கப் பிருத்தானிய துருப்புகள் வெள்ளிக்கிழமை அதிகாலை முயன்றனவென்று ஜப்பானிய செய்தி ஸ்தாபனம் இன்று அறிவித்தது. அது மேலுங் கூறியதாவது:-

"மாங்டாங்குக்கு வடக்கே பத்துச் சிறிய படகுகளில் நதியைக் கடப்பதற்கு 200 துருப்புகள் தயாராகிக்கொண்டிருப்பதை ஜப்பானிய ரோந்துப் படைகள் கண்டன. சத்துரு துருப்புகள் வந்திறங்கும் இடத்தை உடனே ஜப்பானியத் துருப்புகள் விரைந்து சென்று மூன்று பக்கங்களாலும் வளைந்து கொண்டன. உக்கிரமான சண்டைக்குப்பின் சத்துரு வீரர்களெல்லாம் அழிக்கப்பட்டனர். ஒரேயொரு ஜப்பானியவீரன் கொல்லப்பட்டான்.

---

## வங்கத்துக்கு இலங்கையின் உதவி

### 2½ லட்சம் ரூபாய் நன்கொடையளிக்கத் தீர்மானம்

வங்காள நிர்வாண நிதிக்காக, 2,50,000 ரூபாய் நன்கொடையளிக்க இலங்கை மந்திரிசபை தீர்மானித்திருப்பதாக அறியப்படுகிறது.

அரசாங்கசபை நவம்பர் மாதம் 2-ம் திகதி மீளவும் கூடும்பொழுது இதற்கான உபமான்யப் பிரேரணையொன்று கொண்டுவரப்படலாம்.

---

## டிராம்வேச் சொத்து மதிப்பு விஷயத்திற் கஷ்டம்

### மத்தியஸ்தரை நியமிக்க நிதி நிர்வாகசபையின் ஆலோசனை

டிராம்வேச்சொத்து மதிப்பு விஷயத்திற் சிற்சில கஷ்டங்கள் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. எனவே, சம்பந்தப்பட்ட பிரச்னைகளைச் சமரசமாகத் தீர்த்து வைப்பதற்கு ஒரு மத்தியஸ்தரை நியமிக்கும்படி கொழும்பு நகரசபையின் நிதி நிர்வாக சபை சிபார்சு செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

---

## யுத்தவெற்றிக்கு மிகவும் அவசியம்

### இந்தியாவின் 'காக்காப்போன்'

வாஷிங்டன் அக் 6—

"தூரகிழக்குப் பிரதேசங்களைப்பற்றி விமர்சனத்தில் அமெரிக்க பொருளாதார உறவுக் கவுன்ஸில் குறிப்பிட்டிருப்பதாவது:—

'ஜெர்மனி சென்ற யுத்தத்தில் தோற்றதற்குக் 'காக்காப்போன்' (மைக்கா) பஞ்சமும் ஒரு காரணமாகும். இந்தியாவிற் காக்காப்பொன் அதி மாகக் கிடைப்பதோடு உயர்ந்த ரகமாகவும் இருக்கிறது. ஆகவே, யுத்தவெற்றிக்கு இந்தியா மிகவும் அத்தியாவசியமாகும்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானுஷு
புரட்டாதி உஅவ வியாழக்கிழமை

## வடபகுதிப் புகைரதம்

முன்னர்ப் பிரயாண விஷயத்தில் எல்லாவகையாலும் பிரயாணங்களுக்கு வசதியாயிருந்த புகைரதப்போக்குவரவு இந்த யுத்தகாலத்தில் அதற்கு நேர்மாறாகஇருப்பதுஒருநூதனமல்ல; காலத்திற்கேற்க நடந்துகொள்ளவேண்டியது ஆள்வோர்க்கும் ஆளப்படுவோருக்கும் கடனேயாகும். ஆனால், யுத்தகாலத்திலும் இப்புகைரதப் பிரயாண விஷயத்தில், செய்யத்தக்கவாயுள்ள சில வசதிகளைத்தானும் செய்யாமலிருத்தல் பரிதாபப்படத்தக்கதாகும். இலங்கையிலேயும் புகைரதப்பகுதியில் வருவாய் அதிகப்பட்டு வருவதும் பிரயாண வசதி குறைந்து வருவதும் வடமாகாணப் புகைரதமாகு மென்பது முந்தியே பலர் அறிந்த இரகசியம்; இந்த வசதியீனம் இங்கிருந்து கொழும்பிற்குச் செல்லும் பகற்காலப் புகைவண்டிப் போக்குவரத்துத் தவிர்க்கப்பட்டபின் இன்னும் அதிகப்படலாயிற் றெனலாம். இக்கால நிலையை யுத்தேசித்துப் பிரயாணிகள் அந்த வசதியீனத்தையும் சகித்தே தீரவேண்டும்.

ஆனால், இங்கிருந்து தலைமன்னருக்குப் போய்வரும் புகைரததொடர் விஷயத்திற் பிரயாணிகள் படுங் கஷ்டமும் நேரும் தாமதமும் சற்றல்லவே; தலைமன்னரிலிருந்து புறப்பட்டு வடபக்கமாக வரும் புகைரதம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் புறப்பட்டுவரும் புகைரதத்திற்குப் பிந்திய மதவாச்சி ஸ்தானத்தை யடைதலால், அததலைமன்னர்ப் புகைரதவாயிலாகப் பிரயாணஞ் செய்வோர், மதவாச்சி ஸ்தானத்தில யாழ்ப்பாணம் வரும் புகைரதத்தில ஏறி வருதல முடியாதாக, அவர்கள் காட்டின மத்தியிலுள்ளதாகிய மதவாச்சித் தானத்திலேயே தடைபட்டு நிற்க வேண்டியவராயினர். அர்த்த யாமத்திலே மதவாச்சித் தானத்தில் வந்து சேர்ந்த அதிர்ஷ்டங் கெட்ட பிரயாணிகள் அச்சாமந்தொடக்கம் புலர்காலம் வரையில அங்குதகாமே படுத்தற்கு இருத்தற்கு ஏதும் பசியாறுதற்கு எவ்வகையான வசதியும் அகப்படாதவராய், நின்றும் இருந்தும் திரிந்தும் இடர்ப்படுகின்றார்கள். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணமாகப் புறப்பட்டு வரும் பொருள் பண்ட மேற்றும் புகைவண்டித்தொடர் வடியற் புறம் ஐந்துமணிக்குமேல மதவாச்சித்தானத்தை யடைய, அர்த்தயாமந் தொடக்கம் நித்திரையின்றி உணவின்றி ஏனைய வசதிகள் எவையுமின்றி நின்று இடர்ப்பட்ட அப்பிரயாணிகள், குறித்த பொருள் பண்டம் ஏற்றிவரும் புகைரதத் தொடரில் ஏறி யாழ்ப்பாணத்திற்குப்பகல் ஒருமணிக்குமேல் மாலை ஐந்துமணிவரையில் காலத்திற்குத் தக்கபடி வந்து சேருகிறார்கள், இவர்களுடைய பிரயாணம் சிரமத்தோடுங் கஷ்டத்தோடுங்கூடிய தென்பதை எவரும் மறுக்கமாட்டார்கள்.

குறித்த இந்தப் பிரயாணிகள் பலமணி நேரத்திற்கு வசதியாகத் தங்கியிருத்தற்கு அந்த மதவாச்சிப் புகைரதத் தானத்தில் வசதியான விசாலமான கட்டடம் இற்றைவரையில் இல்லையாகும். மதவாச்சித் தானத்திலே இப்பொழுது ஒரு அறை பிரயாணிகள் தங்குவதற்கென்றபோளவிலுண்டு ஆனால் அந்த அறையிலே பிரயாணிகள் தங்குவதற்கான வசதியீனங்கள் எவைகளோ அவைகளெல்லாம் உணடெனலாம்; அது எந்த நேரமும் குப்பை அழுக்கு என்னுமிவைகளோடும் துவற்றில உற்பத்தியாகும் ஈ நுளம்பு கொசு என்னுமிவைகளோடுங் கூடியதாகும்; தர்மணம் வீசியபடியே அந்த அறையின் ஒரு பாகத்திலே அத்தானத்திலுள்ள புகைரதக் கிழுத்தியோகத்தருடைய உத்தியோகதானமும் வகுக்கப்பட்டிருக்கிறது. பெண்கள வேறாக ஆண்கள் வேறாக ஒதுங்கியிருப்பதற்கும் ஏதும் ஒதுக்கான இடம் இங்கே கிடையாது. இப்படியான பல வசதியீனங்கள இன்னுஞ் சில அங்கு உணடெனலாம்.

புகைரதப் பகுதியார் புகைரதப் போக்குவரத்து விஷயத்திலே இப்போதைக்கு வேறு வசதிகளை ஒழுங்குகளைச் செய்தல் இயலாதாயினும் இந்தத் தானத்திலே பிரயாணிகள் வசதியாகத் தங்கிப் போதற்கான சில அறைகளோடு கூடிய ஒரு விசாலமான கட்டடத்தையாயினும் அமைத்துவிட வொண்ணாதா? இதனைத் தவிர இன்னும் ஒருபெரிய வசதியீனம் இத்தலைமன்னார்ப் புகைரதப் பிரயாணிகளுக்கு உண்டு. முந்தி சாங்கேயன் துறையிலிருந்து கொழும்புப் புகைரதத்தொடர் புறப்படும் போது தலைமன்னார்ப் பிரயாணிகளுக்காகிய முன்றுவகுப்பு வண்டிகளும் அதன்தொடரிலே "தலைமன்னார்" என்னும் பெயருடன் சேர்க்கப்பட, தலைமன்னார்ப் பிரயாணிகள வேறாக அந்த வண்டிகளிலேயே ஏறிச் செல்ல, அவ்வண்டிகள மதவாச்சித் தானத்தையடைந்த மாத்திரத்தே வேறாகப் பிரிக்கப்பட்டுவிட பிரயாணிகள தங்கள பயணப்பொருட்களோடு அவ்வண்டிகளிலேயே வசதியாகத் தங்கியிருந்து தலைமன்னாரைச் சேர்வர்; இப்பொழுது இந்த ஒழுங்கு தவிர்க்கப்பட்டுவிட்டது; எல்லாப் பிரயாணிகளும் ஒருங்கு இங்கே ஏறி மதவாச்சித்தானத்திலே இறக்கப்படுகிறார்கள்; நள்ளிரவில் நடுக்காட்டில் இந்தப் பிரயாணிகள் தங்கத் தரிக்கத் தக்க இடமில்லாமையினாற் சங்கடப்படுகிறார்கள்; ஆனதால முன்போலக் காங்கேயன்துறைக் கொழும்புப் புகைரதத் தொடரில், தலைமன்னார்க்கெனப் பிரத்தியேகமாகச் சிலவண்டி தொத்தவிட்டால் பிரயாணிகட்குப் பெரும வசதியுண்டாம்.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்)

### விதியை வெல்லப் பிரமாவாலும் முடியாது

ஒருநாள் வெள்ளிக்கிழமை மத்தியானவேளை, புவனேசுவரி ஸ்நானஞ் செய்து சந்தியாவந்தனம் முடித்துக்கொண்டு பரிசுத்தமான ஒரு அறையில் தெய்வத்தைத் தியானித்துத் தோத்திரஞ் செய்த பின்னர்ப் பின்வருமாறு இறைவனை வேண்டுவாளாயினள்:— "ஆண்டவனே, காநே அபலை, தமியேன் எண்ணிய எண்ணங் கைகூடவேண்டுமென்று, உமது திருவடிகளைப் பிரார்த்திக்கின்றேன்; சிறியேன் தேவரீரைக்கேட்கும் வரமெனிலோ இலகுவிற் கைகூடத் தக்கதல்லவென்பதை அறிவேன்; விதியை வெல்லப் பிரமாவாலும் முடியாதென்பர். அந்த மார்க்கண்டேய முனிவர்தாமும் விதியை வென்றாரோவெனில் இல்லையென்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது; யமனைக் கண்டு அம் முனிவர் பயந்தாரென்றும் அவன் சிவலிங்கப் பெருமானையுஞ் சேர்த்துப் பாசத்தைவீசி இழுத்தபோது மார்க்கண்டேயர் யமவேதனையை அடைந்தாரென்றும், சுவாமி, தேவரீர் அச்சிவலிங்கத்தினின்றும் புறப்பட்டருளி யமனை உதைத்து மாளச் செய்து, "அன்பனே, அஞ்சற்க" என்று அபயமளித்து அந்தஅன்பருடைய சிரசிலே திருக்கரத்தினால் தீண்ட அது அவருடையஎன்பு தோல்நரம்பு நசை முதலியவற்றாலாகிய பஞ்சபூதவுடம்பு நீங்கி, தூய தெய்வத் தன்மையோடு கூடிய அழிவற்ற திருமேனியாக மாறியதென்றும் புராணங்களிலேபடித்திருக்கிறேன். யமபயம், யமவேதனை, உடம்பு மாறுதல் என்னுமிவைகள்தாமே மரணத்தினுல் நிகழ்வன. தேவரீரைப் பலகாலமாகச் சதா பத்தியோடுபூசித்துவந்த மார்க்கண்டேய முனிவர்தாமும் செத்துஞ் சாகாதாரானாரென்றால், சாவித்திரிதேவி ஆரிய விரதத்தை யநுட்டித்து யமனை நேரிற் கண்டும் அவனைப் பலவாறு இரந்தும் பல கஷ்டப்பட்டும் தன்னுபகனுடைய உயிரை மீட்டாளென்றால், அப்படியான அருஞ் செயல் அவ்வுத்தமர்களுக்கே கைகூடுமேயொழிய, சுவாமி நல்ல ஞானம் தவம் புண்ணியம் என்னுமிவைகள் ஈசத்தனையுமில்லாத ஏழையாகிய எனக்கும் அப்படியான அநுக்கிரகம் கிடைக்குமென நினைத்திருப்பது பேதமையல்லவோ; பெருமானே, உம்மை அடியார்க்கெளியார் என்றும் மெய்யர்க்கு மெய்யரென்றும் பொய்யர்க்குப் பொய்யரென்றும் பெரியோர் சொல்வார்களே! பெற்ற தாயை யொளித்தொரு சூலிகலையென்றவாறு, சுவாமி, நீறியாத குறையேதுமென்னிடத்துண்டோ! அல்லையே; ஆனதால் எதற்கும் தேவரீரையே தஞ்சமென நம்பியிருக்கிறேன்" என்று பலவாறு பிரார்த்தனை செய்து, பின் அந்த அறையைவிட்டு வெளியே வந்தாள்;

வந்தவள் தலைவாசற் புறத்தில் யாரோ பரதேசி ஏதோ பாடிக்கொண்டு நிற்பதைத் தன் காதிற் கேட்ட புவனேசுவரி அங்கே சென்றாள்; முண்டிதமான சிரசும் உருத்திராக்க மணியினாலாகிய குண்டலம் பூண்ட சாதுகளும் திருநீற்றை முக்குறியாகத் தரித்த நெற்றியும் அந் நெற்றியின் நடுவண் சந்தனப்பொட்டும், தோளிலே தொங்கவிட்டு மாட்டிய பொக்கணமும், ஒருகையிற் பிரம்பும் மற்றைக் கையிலே வெயில் மழையென்னுமிவைகளை உடம்பிற் படாமற் காக்கக் கூடியதும் வேண்டியநேரத்திற் காற்றை ஆக்கக் கூடியதுமான பனையோலையினால் ஆக்கப்பட்ட பெரிய விசிறியும் காவியுடையும் தரித்தாராய் ஒரு முதியவர்வந்து தலைவாசலில் நிற்பதைக் கண்டாள். அவருடைய முகம் திருவருள் விலாசத்தோடும் கண்கள் கருணையோடுங் காணப்பட்டன; அவரைப் பார்த்த மாத்திரத்திலே, அவர் ஒரு பெரியார் என்ற எண்ணம் புவனத்தின் மனத்திற் புலனாக, அவள் உடனே அவருடைய முன்னிலையிற் சென்று பஞ்சாங்கமாக விழ்ந்து வணங்கி எழுந்து ஒதுங்கி நின்று "சுவாமி,இப்படி இருங்கள்" என்று அயலேயுள்ள ஒரு நாற்காலியைக் காட்ட, அந்தப் பெரியவர் "தாய்க்கேன் தவிசு மகளே, நான் இருக்கவில்லை, இருப்பதற்கு வரவுமில்லை, பசித்து வந்தேன் மகளே, இந்தப் பாழ்வயிற்றிற்கு இடுவதற்கு ஏதுங் கொடுக்க முடியுமா" என்று கேட்டார்; "ஓம், சுவாமி, உங்களைப் போன்ற பெரியோர் கிருபையால் எங்களுக்கு ஒரு குறையுமில்லை, சுவாமி" என்று சொல்லிவிட்டு, புவனம் ஒரு நொடிப்பொழுதில் உள்ளே போய் ஒரு மான்றோலை எடுத்துக்கொண்டுவந்து தலைவாசலில் இருந்த கட்டிலின்மீது அம் மான்றோலை இட்டு, "சுவாமி, இப்படி இருங்கள்" என்று வேண்டுதலும் "என்ன மகளே, எங்குமிராத என்னை இருக்கச் செய்கிறாய், இதுவும் அந்தக் கதிர்காமத்தையன் செயல்தான்" என்று சொல்லிக்கொண்டு மான்றோலின்மீது இருந்தபடி பொக்கணம் கோல் விசிறியென்னுமிவைகளைப் பக்கலில் வைத்துவிட்டு, "கதிர் வேலா" என்று உச்சரித்துக்கொண்டு புவனேசுவரியைப் பாதாதிகேச பரியந்தம் அருள் பெருகப் பார்த்தார். "மகளே, நீ கவலைப்படவேண்டாம்; நீ நினைக்கும் உயிருக்கு முருகன் கிருபையால் ஊறு நேராது, குறித்த காலத்தில் ஆபத்தான நோய் கண்டு உன் பதியாலும் நீ செய்த புண்ணியத்தினாலும் சுகமாகும்; நீ நெடுநாளுக்குச் சுமங்கலியாக வாழ்வாய்" என்று சொல்லித் தம்மிடத்திலிருந்த விபூதிப்பையிற் சிறிது விபூதியையெடுத்து, தம் முன்னர்ப் பணிந்து நிற்கும் புவனத்தின் உச்சியில் இட்டு நெற்றியிலும் பூசி அவளுக்கு நீட்ட, அவள் மீட்டும் அந்தத் துறவியை வீழ்ந்து வணங்கி எழுந்து பயபக்தியோடு இருகரங்களாலும் ஏற்றுத் தானும் ஒருமுறை நெற்றியில் தரித்துக்கொண்டு தனசிந்தையுருக கண்ணீர்பெருக ஒதுங்கி நின்றாள். "சஞ்சலப்படும் என மனத்திற்குத் தேறுதல் தருதற்குத தெய்வமே இப்பெரியவரை இங்கே அனுப்பியருளினார்" என்று சிந்தித்தாள். அத் துறவிபிடத்துப் புவனத்திற்கு விசுவாசம் பிறந்தது; அவள் அவரிடம் உத்தரவு பெறுமுக்கொண்டு நிலைறடியில நின்ற தாயிடம் விரைந்துபோய் "அம்மா! அம்மா!! ஒரு மகான் எங்கள் வீட்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# கந்தபுராணக் கவி நயம்

திருமயிலை, திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை

(முற்றொடர்)

மன்னவரமரர் யாவர வணங்கிநு
மலைவகளெல்லாம்
கன்னிய பரமன் தாளினும் பெருந்
தவத்தினேருந்
தண்ணளி செறியிற் பல்காற்றூழ்ந்
தன வெழுந்து நின்று
பண்ணிசை மறைகள் தம்மாற்
றுதித்திவை பகர்தலுற்றார்.

எவர் எக்கடவுளை வழிபடினும் அவ்வணக்கம் சிவபெருமானுக்கே யுரித்தாகும்என்னும் சாத்திரக்கருத்தைக் கொண்டது இத் திருவிருத்தம். "யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார்தாம் வருவர்" என்னுஞ் சிவஞான சித்தியார்ச் செய்யுளை இதனோடு ஒப்பிடுக.

செங்கண்மால் தானும் நானுந்
தேடுதற் கரிதாய் நின்ற,
எங்கள்தம் பிரானுமேலாவெண்ண
வோர் தேவுமுண்டோ
அங்கவன் ஞானபோத மறிவருக்
குணர்த்தி வைகல்
நங்குறை முழுதுமாற்று நல்லரு
ளாகுமன்றே.

சிவபெருமான் "தேவதேவன்" "மகாதேவன்" என்னுஞ் சுருதிப் பொருளை விளக்கியதாகும் இச்செய்யுள்.

பெற்றிடுங் குரவரானோர் பிள்ளைகள்
தம்பால நோயொன்
றுற்றிடிற் பிறரைக் கொண்டு முறு
துயர் செய்து தீர்ப்பார்
மற்றவர் தம்பாலனபோ வன்கணே
விதுபோ னம்பாற்
பற்றிய பவங்கள் தீர்ப்பான் பரமனு
மிவைகள் செய்தான்.

இச்செய்யுளைப் பின்வரும் சித்தியார்ப் பாடலோடு ஒப்பிடுக:-

தந்தை தாய் பெற்ற தத்தம்புதல்வர்
கள் தஞ் சொலாற்றின்
வந்திடாவிடி னுறுக்கி வளாரினு
லடித்துத் தீய
பந்தமு மிடுவரெல்லாம் பார்த்திடிற்
பரிவேயாகும்
இந்தநீர் முறைமையன்றோ ஈசனார்
முனிவு மென்றும்.

"புளியம் வளாரால் மோதுவிப்பாய்" என்னும் அப்பர் சுவாமிகள் திருவாக்கும் இக் கருத்தையே கொண்டதாம்.

அந்த வெள்ளை யதுகண்டு சேமியுஞ்
சுடுமேந்திய தானையங் காவலன்
செககண மாயன் முன்சென்று
விண்ணேருடன்
பங்கயத்தன் படர்ந்து செப்பினன்.

சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கைலாசத்திற்கு நந்தியெம்பெருமான் வாயிற் காப்போராக விளங்குவதுபோல திருமால் வீற்றிருக்கும் வைகுந்தத்திற்குக் காவலாளனாயிருப்பவன் விடுவசேனன் என்பது இச்செய்யுளால் அறியக் கிடக்கின்றது.

அரியதத்துவமைமையந்தின்பேதமும்
மாபினுடினர் வானுணர் வெய்திய
திருவினுயகன செங்கமலந் திகழ்
பிரமன் மாமுக கோக்கனன் பேசு
வான்.

பாஞ்சராத்திரிகளுக்கு இருபத்தைந்து தத்துவங்களை உடன்பாடென்பதைத் தெரிவித்தவாறும்.

இக்காரண னுதியர் யாவர்களும்
அக்கா ளமலன் பணியாற் றிடனும்
உன்னுவவர் சிந்தனை மொய்க் நகை
யால்
ஒன்னார்புரமட்ட துணர்ந்திலையோ.

திரிபுரம் எரித்த சேவகத்தைக் கூறியவாறும். (நீதமர் செய்கைத் திரிபுரமெரித்தனை)

எந்தா யருளென் றேரிமாங் குமரன்
வந்தா திலையேத்தலும் வைதுசினக்
கொந்தாழல்போல் வருகூற்றவனை
அந்தாள்கொ டுதைத்த துறிந்திலை
யோ.

மார்க்கண்டேயருக்காக யமனை யுதைத்த சிவ பராக்கிரமத்தைப் பாராட்டியதாம். (வலந்தரு காலனை வதைத்தனை)

முன்னைப் பகளியு முகுந்தனுமாரப்
பன்னற் கரிதாயபரம்பொருள் யாம்
என்னச் சிவனெய்தி யிகழ்ந்தவனைச்
சென்னித் தலைகொண்டது தேர்கிலை
யோ.

பிரமன் சிரங்கொய்த வீரத்தன்மையை விதந்தவாறும். (அயன் சிரமொருநா ளரிந்தனை)

அடன்மேவு சலந்தா னுதியாய்ப்
படிமேலுளதோர்ப் பனிருனவர்தாம்
முடிவா ராளுேடு முரண்டிடனுங்
கெடுமாறுபுணர்த்தது கேட்டிலையோ

சலந்தாசுரனைக் கொன்றமையைக் குறிப்பித்தபடியாம். (சலந்தானுடலந் தடிந்தனை)

வீமடய்துறுநின் மகன்வேள்விநிலத்
துடெய்தினர் யாவரு மொப்பிவரன்
மாடெய்தியவிரானின்மானமொரீஇப்
பாடெய்திய புன்செயல் பார்த்திலை
யோ.

தக்க யாகத்தை அழித்தமையைக் கூறியது. "தக்கன் வேள்வி தகர்த்தனை" என்பது பதினோராந் திருமுறை.

அண்டாத வகந்தையொ டாழியின்
வாய்
விண்டான வரச்சுற மேவு விடம்
உண்டா னிகழ் கங்கையைபோ
ராணுவிற்
கொண்டானவன் வன்லமை குறிக்
கிலையோ.

நஞ்சுண்டமையையும்கங்கையைச் சடையிற் றரித்தமையையும் குறித்தபடியாம்.

"குலை குலை குலைந்தகிலையாத் தேவர்
படுபேரவல் மிடையின்றி விலக்கிக்
கடல்விடமருந்தினகருணைபோற்றி"

கங்கையுங் கடுக்கையுங் கலந்தழி
யொருபாற் றிங்கள்சூடிய செஞ்
சடைபோற்றி என்னும் பட்டினத்தடிகள்வாக்கையும் இங்கேகவனிக்க.

தரியா வுளமல் கொடுதன்னிடமும்
அரியோடுசைம் மாவையடற்புலியை
உரியாமிசைய போர்வை யுடுக்கை
யெனப்
பரியா வரானுற்றது பார்த்திலையோ.

நரசிங்கத்தைச் சரபருபங்கொண்டு அழித்தமையையும், தாருகாவனத்து இருடிகள் ஏவிய யானைபுலி முதலியவற்றன் தோலகளை உரித்து ஆடையாகக் கொண்ட விறலகளைப் புகழ்ந்தபடியாம்.

"சிங்கங்கொன்ற சேவகம் போற்றி,"

"கரியொன் றுரிந்த பெருவிறல
போற்றி"

'உக்கிரப்புலியுரியுடுத்தனையென்றும்'

என்னும் பட்டினத் தடிகள் திருவாக்கை நோக்கவும்.

(தொடரும்)

# சுவேதாசுவதரோபநிடதம்

(திரு. ஐ. பொன்னையா, ஏழாலை)

முதலாம் அத்தியாயம்

(முற்றொடர்)

(எ) உத்கீத மேதத் பரமம் து ப்ர
ஹ்ம தஸ்மிம் ஸ்த்ரயம்
ஸுப்ரதிஷ்டா அக்ஷரம் ச |
அத்ராந்தரம் ப்ரஹ்மவிதோ விதித்
வா லீநா ப்ரஹ்மணி
தத்பரா யோநி முக்தா: |

இ—ள்: ஏதத் ப்ரஹ்மம் து- (உள்நின்று செலுத்துகின்ற) இந்தப் பிரமமே, பரமம் - மேலானதாக, உத்கீதம்- (சுருதிகளால்) பாடப்பட்டது, தஸ்மிந்-அதில், த்ரயம்-(பதி பசு பாசம் என்னும்) மூன்றும், ஸுப்ரதிஷ்டா - நன்கு நிலைபெற்றுக்கின்றன, அக்ஷரம் ச- (அவை மூன்றும்) அழிவற்றனவுமாம், அத்ர -அந்த மூன்றிற்கும், அந்தரம்-வேறுப் அல்லது உள்ளீடாயிருக்கிற பொருளை (பிரமத்தை) ப்ரஹ்மவித:- வேதத்தையறிந்த முனிவர்கள், விதித்வா-அறிந்து, ப்ரஹ்மணிலீநா தத்பரா- அந்தப் பிரமத்தில் லயித்து அதுவாய் (பிரம நிட்டை யுடையோராய் யோநி முக்தா:- பிறப்பினிருந்து விடுபட்டவர்களாய் (ஆகிறார்கள்).

குறிப்பு-(க) "ஏதத்" (இந்த) என்ற சுட்டு மேல் மந்திரத்திற் கூறிய சீவான்மாவுக்கு வேறாய் உள்நின்ற செலுத்துகின்ற" என்பதைக் குறிக்கும்.

(உ) "பதிபசு பாசம் என்னும் மூன்றும் அதில் நன்கு நிலைபெற்றிருக்கின்றன" பதி என்றது ஐந்தொழில் செய்தற் பொருட்டுத் தன் திருவருள் வடிவாகிய பராசத்தியோடு கூடி, இலய சிவன் போக சிவன் அதிகாரசிவன் என்னும் பெயர்களைப் பெற்று அருவம் அருவுருவம் உருவம் என்னும் மூவகைத் திருமேனி கொண்டு விளங்கும் இறைவனது தடத்த (பொது) வியல்பினை, இறைவனது தடத்த நிலைக்கும் சொரூப நிலைக்கும் உண்மையிற் பேதமில்லையாயினும் சத்தி காரியத்தின் பொருட்டுப் பேதமானது உளதாகின்றது. சத்திக்கும் சிவத்துக்கும் பேதமில்லை என்பதும் முன்னர்க் காட்டப்பட்டது. "சிவஞ் சத்தி நாதம் விந்து சதாசிவன் றிகழுமீச, னுவந்தரு ளுருத்திரன்றன் மாலயனென்றி னொன்றாய், பவந்தரு முருவ நாலிங் கருவநா லுபயமொன்றாய், நவந்தரு பேத மேகநாதனே நடிப்பன்" என்றது சிவஞான சித்தி. இன்னும் இறைவனது இம்மூவகைத் திருமேனிகளினியல்பை எல்லாம் பவுட்கரத்துப் பதிபடலத்திலும் சிவஞானசித்தியார் முதலாஞ் சூத்திரத்து இரண்டாமதிகாரணம் முதலிய விடங்களிலும் விரித்துரைக்கப்பட்டிருக்கின்றன. அவ் விடங்களிற் கண்டு தெளிக.

(ங) பதிபசுபாசம்மூன்றும் அழிவற்றவை அதாவது பதியைப் போல வ பசுவும் பாசமும் தோற்றமும் இறுதியுமற்றநித்தியப்பொருட்கள். அது இவ்வத்தியாயத்தில் வரும் ஒன்பதாவது மந்திரத்தில் விளக்கக் கூறப்படும்,

(ச) "பிரமத்தையறிந்து அதில் லயித்து நிட்டை யுடையோராய் முத்தர்களாகிறார்கள்" "ஆன்மாவாகிய தன்னைப் பிரமத்தின் வேறுயறிந்து" எனபது மேல ஆறாவது மந்திரத்திற் பெறப்பட்டது. இந்திரியங்களின் வேறாகிய சேதனப் பொருளாகுந் தன்னை அங்ஙனம் அவற்றின் வேறாகக் கண்டாலன்றித் (தான் சுதந்திரமினனென்றும், தனக்குள் நின்று தன்னைச் சுகதுக்கங்களிற்செலுத்திடாத்தும் தலைவன் ஒருவன் தனக்கு வேறுயுளனென்றும்) தலைவனையறிதல் கூடாது. "(சிவ) ஆன்மாவில்(பரம) ஆன்மாவைக் காணவேண்டும்" பிரஹதா—சு-ச-உரு. 'கன்மபோகங்களை அனுபவிக்கின்றசீவான்மாவையும் அவனுக்கு அருகிலிருப்பவனும் எல்லாவற்றிற்கும் தலைவனுமுள்ள பரமான்மாவையும் எவன் அறிகிறானோ" கடம் - 4-15.

'ஊனக்கண் பாசமுணராப் பதியை
ஞானக் கண்ணிற் சிந்தைநாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாச
மொருவத்தண்ணிழலாம்பதி"

சிவஞானபோதம்—சூத். கூ "சிந்தை" என்றது தன்னறிவின் கண் என்றவாறு. "கள்ளத்தைக் கழியம் மனமொன்றின், றுள்ளத்தில் லொளியைக் கண்ட துள்ளமே"
நாவுக்—தேவாரம்.

இனி, அங்ஙனம்தலைவனைக் கண்டாலன்றி அவனிடத்து லயித்திருத்தல் கூடாது. லயித்தல்-தன் போதம் முனைத்துத் தோன்றுதொழிதல்-லயித்தன்றி நிட்டைகூடுதல் அமையாது எனவே, தன்னைக் காண்டல்முதலிய இவை யொன்றற்கொன்று ஏதுவும பயனுமாய்ச் சிறந்தமை கண்டுகொள்க.

—தொடரும்.

## களுத்துறைச் சுப்பிறீம் கோட்டில் மூவருக்கு மரண தண்டனை

களுத்துறை அக் 8—
செப்டம்பர் மாதம் 6-ந் திகதி ஆரம்பமான களுத்துறைச் சுப்பிறீம் கோட்டு விசாரணை நேற்று முடிவடைந்தது. நீதிபதி மிஸ்றர். டி. கிரெட்ஸர் முன்னிலையில் 14 வழக்குகள் விசாரிக்கப்பட்டன. இவ் விசாரணையின்போது மூவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

மற்றொரு சுப்பிறீம் கோட்டு விசாரணை அடுத்த செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு நீதிபதி மிஸ்றர். விஜயவர்த்தன முன்னிலையில் ஆரம்பமாகும். 21 கொலை வழக்குகள் உட்பட மொத்தம் 34 வழக்குகள் விசாரணைக்குக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

## நவராத்திரி விழா

"நிகழும் சுபானு வருடம் புரட்டாதி மாதம் 21 உ (7-10.43)வியாழக்கிழமை யன்று தெஹிவலைச் சைவசித்தாந்த மன்றத்திலே சரஸ்வதி பூசை வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பூசைக்குப் பின்னர், திரு. பொ. த. நமசிவாயம் அவர்கள் கல்வியின் பெருமையைப் பற்றியும், அதிலுள்ள பெரும் புதையல்களைப் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினர். இத்தினத்திற்கு முந்திய ஞாயிறுக்கிழமை யன்று பிற்பகல் 6 மணியளவில் மன்றத்திலே திரு. சோம. சரவணபவன் அவர்களின் தலைமையில் திரு. சே. க. சண்முகம்பிள்ளை அவர்கள் 'நவராத்திரி' என்னும் விஷயமாக ஓர் இனிய சொற்பொழிவு நிகழ்த்தினர்கள்."
—கடித.

# தமிழர் நாகரிகக் காட்சிகள்

கொழும்புத்துறை — பண்டிதர் வி. கே. பி. நாதன்

உலகிலுள்ள சாதியார்கள் பெரும்பாலும் தத்தம் சரித்திரங்களை எழுதிக் காப்பாற்றி வந்திருக்கின்றனர்; தமிழருக்குரிய பூரணமான சரித்திரம் இல்லாதிருப்பது பெருங் குறையேயாகும்! ஒரு சில இலக்கிய நூல்களிலும் மற்றும் அங்குமிங்குமாகப் பொறுக்கியெடுக்கப்பட்ட சில ஆதாரங்களைப் பொருத்தி எழுதப்பட்ட சில தமிழர் வரலாற்று நூல்கள் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. அவையும் முக்கியமாக ஆராய்ச்சி முறையில் எழுதப்பட்டனவாதலின் சாமானியமக்களுக்குப் பயன் அளிக்கமாட்டா. ஆகவே சுவாமி விபுலானந்தா போன்ற தமிழ்ப்பெரியார் இத்துறையில் ஈடுபட்டு எம்பண்டைத் தமிழரின் சரித்திரத்தையும் நாகரிகத்தையும் காப்பாற்றி வைப்பாராக.

சரித்திரமும் கர்ண பரம்பரையும் எட்டிப் பார்க்க முடியாத பண்டைப் பழங்காலம், அதாவது, கல் தோன்றி மண் தோன்றாத காலம் என்று தமிழ் மக்கள் சொல்லுவார்கள். மனிதர்கள் மலைகளிலும் மலை சார்ந்த நிலங்களிலும் வசித்து வருகிறார்கள். குமரி முனைக்குத் தெற்கே இப்பொழுதுள்ள கடல் நிலமாக இருக்கிறது. அந்த நிலத்திலும் வடக்கே வடவேங்கடம் வரைக்கும் தமிழகம் வியாபித்திருக்கிறது.

தமிழர்கள் தாங்கள் வாழும் மலை சார்ந்த இடங்களைக் 'கல்' என்னும் சொல்லால் குறிப்பிடுகிறார்கள். மலையருவிகள் 'கல்' என்று சப்திக்கின்றன. மலைவாசிகள் பழக்கி வளர்க்கும் வேட்டைநாய்கள் கடுங்கோபமெடுத்துக் குரைக்கும்போதும் 'கல்' என்ற தொனி பிளக்கிறது. அவர்கள் வேட்டைநாய்களோடு வேட்டைக்காவது போருக்காவது திரண்டு செல்லும்போது, 'கல' என்ற பேரொலி உண்டாகிறது. இவ்வொலிவகைகளோடு நெருங்கிப் பழகிவரும் மக்கள் தாங்கள் வாசஞ் செய்யும் மலையையும் 'கல' என்ற பெயரால் குறிப்பது இயல்பேயன்றோ? இம்மக்கள் மலையில் தோண்டுவதையும் 'கல்' என்ற சொல்லால் குறிக்கிறார்கள். அவர்கள் மலைமேல் பல இடங்களிலும் சென்று கிழங்கு முதலியவற்றைத் தோண்டிக்கொணர்ந்து, உணவாக உட்கொள்ளுகிறார்கள். பிறகு தேன்கூட்டைக் கலைத்துத் தேனைப் பருகுகிறார்கள். பசி தீர்த்தும், பண்டைத் தமிழ் இசையில் மலைவளம்பாடி நடனம் செய்கிறார்கள். இம்மக்கள் தமிழர் நாகரிக ஏணியின் முதற்படியில் இருக்கிறார்களென்று அறிந்து கொள்ளுகிறோம்.

நாளடைவில் இவ்வாதி மக்கள் மலை நிலத்தைத் தோண்டித் தினை விதைக்கக் கற்றுக்கொள்ளுகிறார்கள், இவர்கள் மலைக்காட்டின சிற்சில பகுதிகளை அழித்துத் தினை விதைப்பதைக் காணுகிறோம். இவ்வழக்கம் படிப்படியாக அபிவிருத்தியடைகிறது. தினைப்பயிருக்காக நிலத்தைத் தோண்டிப் பண்படுத்தத் தொடங்கிய தமிழர், தங்கள் மனத்தையும் அத்தொழிலுலேயே ஒருவாறு பண்படுத்திக் கொள்கிறார்கள். இவர்கள் எவ்வளவு சிரமத்தோடு நாகரிக ஏணியின் இரண்டாவது படியில் அடிவைக்கிறார்கள்! இந்த நிலைமையில் தமிழ் நாகரிகம் தினைப்பயிரைச் சூழ்ந்து வளர்வதைக் காண்கிறோம்.

பழந்தமிழ் மக்கள் காடுகளுக்குச் சென்று யானை, புலி, கரடி முதலிய பலவேறு மிருகங்களையும் வேட்டையாடுகிறார்கள். மிருகங்களின் மாமிசமும், கிழங்கு முதலியவற்றோடு சேர்ந்து அவர்களுக்கு உணவாகிறது. மிருக வேட்டையாடுவதற்குக் கற்களால் செய்த கருவிகள் மட்டும் போதுமா? காடுகளில் ஏராளமாக வளர்ந்திருக்கும் மூங்கிலை வளைத்து வில்லாக உபயோகப்படுத்திக்கொள்ளுகிறார்கள். வில்லை வளைத்துக் காட்டுவதற்குக் காட்டுக் கொடிகள் உபயோகமாகின்றன. நீண்ட முள் அம்பாக உதவுகிறது. அவர்களது கல்வி, கல்லின் கல்வியாகத் தொடங்கி, வில்லின் கல்வியாக வளர்கிறது. நாளடைவில் இக்கல்வியிலே அவர்கள் எவ்வளவு தேர்ச்சி பெறுகிறார்கள்! ஓரே அம்பினால் ஒரு புலியோ, சிங்கமோ கொல்லப்படுவதைக் காண்கிறோம். ஆ! என்ன வீர வாழ்க்கை!

பின் இம்மலைவாசிகள், காடுகளிலே மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்ந்துகொள்வதால் நெருப்பு உண்டாவதைப் பார்க்கிறார்கள். பிறகு நெருப்பு உண்டாக்கும் வித்தையைக் கற்றுக் கொள்ளுகிறார்கள். ஒளி உண்டாக்கக் கற்றுக்கொண்ட பின், அவர்கள் உள்ளத்திலும் அறிவின் ஒளி சிறிது அதிகமாய்ப் பிரகாசிக்கிறது. அவர்கள் மாமிசத்தை வேகவைத்துச் சாப்பிடத் தொடங்குகிறார்கள். தற்காலத்தில் ரயில், தந்தி முதலியவற்றைக் கண்டுபிடித்தவர்களுக்கு ஆதியில் நெருப்பைக் கண்டுபிடித்தவன் தாழ்வா? என்று நம் மனம் பூரிக்கின்றதல்லவா?

குகைகளில் வசித்துவந்த மக்கள் நாளடைவில் குடிசை கட்டி வாழ்வதையும் பார்க்கிறோம். வீடு கட்டிய நாள் தொடங்கி அவர்கள் உணவுப்பொருள்களையும் வேறு பொருள்களையும் சேர்த்து வைக்கக் கற்றுக்கொள்ளுகிறார்கள். தழைகளையும் மரவுரிகளையும் தரித்துவந்த பின், பருத்தி நூலால் ஆடை நெய்யவும் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

இப்பொழுது எங்கள் மனக்கண் முன் தினைப்பூமியைச் சூழ்ந்து நடைபெறும் சிலகாதல்—நாடகங்கள் தோன்றுகின்றன. தினைக்காடு வளர்ந்திருக்கிறது. ஒரு பெண் அக்காட்டிலே தினை கொய்து கொண்டிருக்கிறாள். கழுத்தளவாய் வளர்ந்த பயிரைத் தன் மார்பிலே அணைத்துக்கொண்டு, தானியம் நிறைந்த கதிர்முடியை அவள் கொய்யப் போகும் தோற்றம், மலைவாசியாகிய காதலன் ஒருவனை வெறிகொள்ளச் செய்கிறது. காதலன் தேகக்கட்டு வாய்ந்த உயர்திருவாளன் எனினும் தன்னை நோக்கிப் பிறழும் கொழுத்த விழிகளுக்கு முன் நிமிர்ந்து நிற்க முடியாமல் தத்தளிக்கிறான். அப்பெண் கொய்துகொண்டிருக்கும் தினையைக்கண்டு பொறாமைப்படுகிறான். 'அத்தினை செய்த தவமும் நான் செய்யவில்லையே' என்று வருந்துகிறான்.

பெண்கள் சில வேளைகளில் மலையுச்சியிலிருந்து குதிக்கும் அருவியிலே ஆடுகிறார்கள். சுனையில் மூழ்கி விளையாடுகிறார்கள்; கூந்தலின் நீரைப் பிழிந்து ஈரம் புலர்த்தி வருகிறார்கள். வேறு சமயங்களில் பாடுகிறார்கள், ஆடுகிறார்கள், மலர் கொய்கிறார்கள், பன்னிறமலர்களால் தொடுத்த பூமாலைகளைக் கூந்தலிலே அழகுபெறச் சூடிக்கொண்டு வருகிறார்கள். ஒரு சமயம் அவர்கள் பைங்கிளிகளைப் போல பூஞ்சோலைகளில் அங்குமிங்கும் பறந்து திரிகிறார்கள். இப்பெண்களை வில்லும் கையுமாக எதிர்ப்பட்டுக் காதலிக்கும் வீர புருடர்களையும் காணுகிறோம்.

ஒரு வீரன் ஒரு பெண்ணை நோக்கி "என் அம்புக்கு அஞ்சி இப்பக்கமாக ஓடிவந்த யானையைக் கண்டதுண்டோ?" என்று கேட்கிறான். பெண் ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவன் மனம் அழிந்து, 'என்னுடன் ஒரு வார்த்தை பேசவும் பழியாமோ?' என்று கெஞ்சுகிறான். அவள் மறுபடியும் மௌனமாயிருக்கிறாள். அவனது கண்களோ அவளை மயக்குகின்றன. வீரன் தான் வேட்டையாடி வந்த யானையை மறந்து அங்கேயே நின்றான். அப்பெண் தன்னோடு ஒரு வார்த்தையேனும் பேசும் காலத்தை ஆவலோடு எதிர்நோக்குகிறான். பெண்ணின் மௌனம் அவனை வருத்துகிறது. எனினும் அவன் அதிர்ஷ்டத்தைப் பாருங்கள்! மதயானையொன்று மரங்களைச் சடசடவென்று முறித்துத் தள்ளிக்கொண்டு இடிபோல் முழங்கி வருகிறது. பெண் உயிர்காக்க வழியறியாது ஒருகணம் மனம் சோர்ந்து நிற்கிறாள். மறுகணம் கைவளை ஒலிசெய்யும்படி ஓடிச்சென்று அவ்வீரனை அடைந்து கடுங்காற்றில் நடுக்கும் பூங்கொடிபோல் துடிக்கிறாள். உடனே வீரனது அம்பினால் முகத்திலே புண்பட்ட மதயானை புறங்கொடுத்து ஓடுவதைப் பார்க்கிறோம். இக்காட்சிகள் பல எங்கள் கண் எதிரில் வருகின்றன. இவை பண்டைத் தமிழரது மலை வாழ்க்கையில் சாதாரணமாக நிகழும் காட்சிகள். இங்ஙனம் தினைக்காடு காதலர் காட்சிக்குரிய களமாக விளங்கியதோடு, வீரம் விளைத்தற்கு உரிய சந்தர்ப்பத்தையும் தமிழ்மக்களுக்கு அளித்திருக்கிறது.

தமிழ்ப் பெண்களிடம் பெண்மையோடு ஆண்மையும் பார்க்கிறோம். தினைப்புனத்தில் மரத்தின் உச்சியில் அமைந்துள்ள பரணிலே ஒரு பெண் விரைந்து ஏறுகிறாள். அப்பெண் கவண் முதலியன கைக்கொண்டு விளைந்த தினைப்பயிரில் விழும் கிளி முதலிய பறவைகளை ஓட்டிக்கொண்டிருக்கிறாள். சிலசமயம் அவள் வீசும் கற்கள் விசையாக வந்து, பயிரை அழிக்கும் துஷ்டமிருகங்களையும் ஓட்டுகின்றன. வேறு சமயங்களில் இப்பெண் கிழே இருந்து முறத்தால் தினையை வீசிக்கொண்டிருக்கிறாள். அப்பொழுது புலியொன்று வருகிறது. பெண்ணோ சிறிதும் அஞ்சாமல் தன் முறத்தினாலேயே புலியை வெருட்டி அடிக்கிறாள்.

"சுவாசம் உயிரன்று; சுதந்திரமே உயிர்" என்னும் கொள்கை வாய்ந்த பெருமக்கள் இப்புறைய உலகில் "சான்றோர்" எனப்பெயர் பெறுகிறார்கள். பிற்காலத்திலேதான் "சான்றோர்" என்பது அறிவு ஒழுக்கங்களில் சிறந்த பெரியோரைக் குறித்து நிற்கின்றது. மலைவாசிகளான பழந்தமிழர்களின் வீர சுதந்திர விருப்பமே பின்னாளில், "நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்" என்னும் பக்குவப் பெருங்கொள்கையாகத் தழைப்பதைக் காண்கிறோம்.

வேட்டையாடுவதும் போர் புரிவதும், காதல் புரிவதும் இப்பழந்தமிழருக்கு அரும்பெருங்கலைகளாயிருக்கின்றன. இவர்கள் எவ்வளவோ சிரமத்தோடும் கஷ்டத்தோடும் அறிவுப்பயிற்சி பெற்று நாகரிக ஏணியில் படிப்படியாக மெல்ல மெல்ல ஏறிவருவதைப் பார்க்கிறோம். கல்லின் கல்வியும், வில்லின் கல்வியும், கிழங்கு தோண்டித் தேன் எடுக்கும் கல்வியும், காடு கெடுத்துத் தினைப்பயிர் செய்யும் கல்வியும், காதலின் கல்வியும், இவ்வாதிமக்களது கல்வி வளர்ச்சியில் முக்கியமான படிகளாக அமைகின்றன. இந்தப் படிகளைத் தாண்டிச் செல்வதற்கு இம்மக்கள் இயற்கையின் வாயிலாகவே, ஒருவாறு நாகரிக வாழ்வும் ஒழுக்க நெறியும் கண்டு, சமய உணர்ச்சியும் பெறுகிறார்கள்.

இம்மக்களிடையே விசேஷமாகத் தழைத்து வளரும் காதல், இல்லறம் வளர்ப்பதற்கு உபயோகமாகியிருக்கிறது. இது பிற உயிர்களிடத்து அன்பு செலுத்துவதற்கும் ஓர் அரிய வித்தாகிறது. காதல் ஒழுக்கம் எவ்வாறு பக்திப் பெருக்காதலின் வித்தாகுமென்பது, ஆழ்வார் நாயன்மார்களின் பாசுரங்களிலே இனிது புலனாகிறது.

மலையிலே உற்பத்தியாகும் தமிழ் நாகரிகம் காடுகளின் வழியாகப் பெருகும் ஆறுகளோடு கடலைநோக்கி வருவதைக் காண்கிறோம். ஆதிமக்கள் காடுகெடுத்து நாடுகண்ட பின், ஆறுகளின் இருகரைகளும் தமிழ் நாகரிகத்தின் வளர்ப்புப் பண்ணைகளாவதைப் பார்க்கிறோம். மலையிலே பிறந்து, காட்டிலே தவழ்ந்த தமிழ்நாகரிகம், காடுகளினிடையே இயற்கை வனப்போடு அமைக்கப்பெற்ற கிராமங்களிலே, அழகு சுமந்த இளம் பருவம் அடையக் காணுகிறோம். பின்னர் அது ஆற்றங்கரை வழியாகக் கடற்கரை செல்லுகிறது. அப்பால் தமிழர் நாகரிகம் திரைகடலோடிப் பல வேறு நாட்டினரது கூட்டுறவும் பெற்று மேனி செழித்து வளர்ந்து பௌவன செளந்தரியத்தை அடைகிறது. இந்நிலையிலேதான், "யாதும் ஊரே! யாவரும் கேளிர்!" என்னும் தனிப்பெருங்கொள்கை தமிழ் மக்களிடையே தோன்றுகிறது.

கிரீசு, ரோம், பபிலோன முதலிய வெளிநாடுகளோடு தமிழர் பொருள் வாணிபமேயன்றி, உயர்தரவாணிபமாகிய அறிவு வாணிபமும் செய்துவரக் காண்கிறோம். சங்க காலத்திலேயே ஆரிய நாகரிகமும் தமிழ்நாகரிகமும் ஒன்றோடொன்று கலக்கத் தொடங்குகின்றன. ஆரியர்களோடு தமிழர்கள் கலந்தபின், தமிழ்நாகரிகம் புதிய உயிரும் ஒளியும் பெறுகின்றது.

இத்தமிழ் மக்களது சிறந்த கருவியாகத் தமிழ்மொழியும் வளர்ந்துவருகிறது. இயற்கைச்செல்வியின் மடியில் வளர்ந்த தமிழ்மொழியைப் பாண்டியர்கள் சங்கங்களின் வாயிலாக வளர்த்துவருகிறார்கள். தமிழ்க் களஞ்சியமான பழம்பாட்டுகளின் வாயிலாக நம்முன்னோரது மொழிப்பற்றையும், பெருமிதத்தையும், அறிவின் பெருக்கத்தையும் அன்பின் கனிவையும் அறிந்து அனுபவிக்கிறோம். பண்டைத் தமிழ் நூல்களிலே நமது முன்னோரையாகளை முகமுகமாய்க்கண்டு வார்த்தையாடுகிறோம். அவர்களது வீராவேசத்தைப்பருகி எமது உள்ளமும் பற்றிக்கொள்ளுகிறது.

காதலும் வீரமும்கூடி மலையிலே விளைந்த தமிழ்ப்பயிர், தென்மதுரையிலும், கபாடபுரத்திலும், அப்பால் பிற இடங்களிலும் செழித்து வளர்வதைக் கண்ணுறுகிறோம். ஆ! விதியின் கொடுமை! சில சமயங்களில் அப்பயிர் குமரிக்கோட்டையுங் கடலால் ஒருவாறு அழிந்து போவதையும் காணுகிறோம். இன்னமாக எங்கள் முன்னோரது வாழ்விலே இன்புறுகின்றோம். தாழ்விலே துக்கப்படுகின்றோம்.

இவ்வாறு தமிழ் இலக்கியக் கண்ணாடி வாயிலாக நாங்கள் பண்டைத் தமிழ் நாகரிகத் துறைகள் சிலவற்றைப் பார்த்தோம். ஆகலின் பண்டை நாகரிகத்தைப்பார்த்து நமது எதிர்காலத்தைச் சென்றகாலத்திலும் மிகமிகப் பெருமை வாய்ந்ததாக ஏற்படுத்த ஒவ்வொரு தமிழனும் முற்படவேண்டும். தமிழரின் முற்கால நிலையும், எதிர்கால நன்னிலையும் ஒவ்வொரு தமிழனின் உள்ளத்திலும் அழியாத ஓவியமாக அலர்ந்து விளங்கத் தேவன் அருள் புரிவானாக!

# உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

டிற்கு வந்திருக்கிறார்; எல்லாம் உள்ளபடி சொல்லுகிறார். தமக்குப் பசியென்று தெரிவிக்கிறார்; அந்தப் பெரியார் எங்களுடைய வீடு தேடி வந்தது நாங்கள்செய்த பாக்கியந்தான்; காலதாமசஞ் செய்யாமல் அவரை அமுதுசெய்விக்கவேண்டும் அம்மா" என்று துடிப்போடுஞ் சொல்ல, கேட்ட சின்னம்மாள் சந்தோஷப்பட்டு "சமையலாயிற்று, பெரியவரைப் பசிக்கவைக்கவொண்ணாது" என்று சொல்லி மகளுடன் தானுங் கூடிக்கொண்டு அங்கே வந்து பெரியவரை வணங்கிக் கால் கை சுத்தி செய்தற்கு நீர் உதவி, அவர் அங்ஙனம் செய்தபின் உள்ளே அழைத்துச் சென்று இன்சொற்சொல்லி இருக்கச் செய்து உண்கலந்திருத்தி மகளையே உணவு பரிமாறச் செய்து தான் ஒரு புறத்தே ஒதுங்கி நின்றாள்; புவனேசுவரி பயபக்தியோடு போசனம் பரிமாறும்போது அந்தப் பெரியவர் கண்களில நீர் ததும்புவதையும் இடையிடையே அந்நீரை அவர் உத்தரீயத்தால் ஒற்றி யகற்றுவதையும் அவதானித்தாள்; அவர் அப்படிச்செய்தற்குக் காரணமென்னவென்பதை அறிய ஆவல் கொண்டாள்; ஆனால் அவரைக் காரணங் கேட்க மனந் துணிந்திலள். பெரியவர் போசனம் முடித்து வாயலம்பிக் கைகால்சுத்தி செய்து கொண்டு பழையபடி தலைவாசலில் வந்து இருந்து விபூதி பூசியபின், தம் பக்கத்தில் விநயமாக நின்ற புவனத்தை அருள் கூரப் பார்த்து "குழந்தாய், முருகன் பூரணகிருபை உனக்குக் கிடைக்கும், நீ கவலை யொழி" என்று பின்னருஞ் சொல்லி அவளுக்கு விபூதி வழங்க அவள் இரு கரங்களையும் நீட்டி அதனை ஏற்றுத் தரித்துக்கொண்டாள்; "குழந்தாய், நான போய்வரலாமா" என்று சந்நியாசி அன்புடன் கேட்க, புவனம் ஆம் என்றுஞ் சொல்லாது அல்ல வென்றுஞ் சொல்லாது "சுவாமி! இப்பொழுது வெய்யில் அதிகமாக இருக்கிறது" என்று பணிவுடன் சொல்ல, அவளுடைய உள்ளக்குறிப்பை யுணர்ந்த பெரியவர் "என்னடியம்மா, என்னை இனனும் இங்கே இருக்கும்படியா சொல்லுகிறாய்? எங்களுக்கு வெயில் மழை பனி காற்று எல்லாம் ஒரே வகையாகத்தான் இருக்கும்; சரி, குழந்தாய், நீ பசித்திருக்கிறாய், போசனம் முடித்துவிட்டு அதிகநேரம் பசியிருக்க வொண்ணாது, நீ ஏதும் ஆகாரம்அருந்திவிட்டுவா" எனலும் புவனேசுவரி அவரை நமஸ்கரித்துக்கொண்டு அப்படியே போய்ச் சுவாமியாரின் கட்டளையைத் தாயிடஞ் சொல்லிவிட்டுப் போசனம் முடித்துக்கொண்டு மீண்டும் தலைவாசலையடைந்தாள். அங்கே அச் சந்நியாசியார் ஏதோ தியானத்தில் இருப்பதைப் புவனம் அவதானித்துக்கொண்டு தானும் மௌனமாய நின்றாள். சற்று நேரஞ் செல்ல பெரியவர் கண்விழித்துப் பார்த்தப் புவனம் நிற்பதைக் கண்டு "குழந்தாய், அப்படி இரு" என்று கட்டளையிட அவள் அப்படியே இருந்தாள்.

## "தூங்காமல் தூங்கிச் சுகப்பெறுவ தெக்காலம்"

"சுவாமி, இந்த மான்தோலின் மேல் ஒரு தலையணை கொண்டுவந்து இடுகிறேன், சற்றுநேரம் சிரமந் தீரத் தூங்கவொண்ணாதா" என்று புவனம இரந்துகேட்க, பெரியவர் புன்னகை செய்து "குழந்தாய், ஒருவர் இல்லத்தில் ஒரு நிமிஷந் தானும் இருக்காத எம்மை இருக்கச் செய்தாய், உண்ணாத எம்மை உண்பித்தாய், இவை போதாதென்று தூங்கவுமா சொல்லுகிறாய். நீ வெகு சமர்த்தியடி மகளே; இந்தச் சுகங்களெல்லாம் எமக்கேதுக்கடி குழந்தாய்; "ஆங்கார முள்ளடக்கி ஐம்பொறியைச் சுட்டறுத்து, தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவதெக்காலம்" என்றல்லவா நாம் ஏங்கித் திரிகிறோம், மகளே" என்று ஆதங்கமாகப் பகர்ந்தார். கேட்ட புவனம் இருக்கைவிட்டெழுந்துநின்று கும்பிட்டு "சுவாமி சிறுபிள்ளைப் புத்தியினால் அப்படிச் சொல்லிவிட்டேன், குறையெண்ணாது பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்று வேண்டுதலும், பெரியவர்சிறுநகைசெய்து "குறையொன்றுமில்லையடி குழந்தாய், உப்படி இரு, உனக்குங் குறையில்லை, எமக்குங் குறையில்லை" என்று சொல்ல, புவனம் பழையபடி இருந்தாள். "சுவாமி, உங்களிடத்தில் நான் ஒரு விஷயம் கேட்டுஅறிந்துகொள்ளலாமா" என்று பணிவுடன் விண்ணப்பஞ் செய்ய, பெரியவர் சிரித்து "மகளே நீ கேட்க விரும்பும் விஷயம் எனக்கு விளங்குகின்றது; அவைகளெல்லாம் உனக்கு ஏனடியம்மா; அதனைச் சொல்லப்போனால் மிகவிரியும்! என்றார்; "சுவாமி, நான் அதிகங் கேட்கவில்லை; ஒன்று தான் கேட்டறிய ஆசைப்படுகிறேன்" என்று புவனம் பரிவுடன் சொல்ல, "அது ஒன்றோடு நில்லாது மகளே, சரி, நீ கேட்பதைக் கேள் நான் சொல்லுகிறேன்" என்றார் பெரியவர். "சுவாமி, நீங்கள்சற்றுமுன்பு போசனஞ் செய்யும்போது உங்கள் கண் கலங்கக் கண்டேன்; நான் ஏதும் பிழை செய்தேனோ என்று என் மனம் பயப்படுகிறது" என ஆவலுறச் சொன்னாள்; "குழந்தாய், நீ எமக்கேதுங் குறைசெய்ய மாட்டாய்; செய்தாலும் நாம் குறையாக எண்ண மாட்டோம்; அந்நேரத்தில் எம் கண் கலங்கியதற்குக் காரணஞ் சொல்லப் போனால் எம் பழைய வரலாறெல்லாம் சொல்லவேண்டி வரும்; இதையிட்டுத்தான் நாம் முன்பு சொல்ல யோசித்தோம்; மகளே நாம் சில காலமாக ஒருவர் வீட்டிலே போய் உண்பதும் தங்கி யிருப்பதுமில்லை; முருகன பூசையை முடித்துக்கொண்டு எங்கேனும் மடத்தில் ஏதும் அகப்பட்டால் உண்பேம்; இல்லையேல் உண்ணுதொழிவேம்; இவ்வளவு காலமும் பிச்சைக்கென்று புறப்பட்டோமல்லேம்; இன்று எம் பூசையை முடித்துக் கொண்டபின உணவுயாதும் இல்லையாக, இந்த மார்க்கமாகப் புறப்பட்டு வரும்போது, முருகன் அருள் இங்கே எம்மைச் செல்லத் தூண்ட வந்தேம்; வந்தவிடத்து குழந்தாய் உன்னைக் கண்டேம்; கண்டவுடனே எம் ஒரேயொரு மகளின் ஞாபகம்வந்தது...." எனறுசொல்லி முடிவதற்கிடையில "சுவாமி, குறையெண்ணாதீர்கள்; தங்களுக்கு ஒரு மகளுண்டோ, இப்பொழுது இருப்பது எங்கே? அறிய ஆவலாயிருக்கிறேன்; சொல்லுங்கள சுவாமி" என்று அற்புதத்தோடும் ஆர்வத்தோடும் வினவினாள் புவனம்; "குழந்தாய்! எம பழைய வரலாறு கேட்கப் பரிதாபமானது; அல்லாமலும் நாம் இப்பொழுது இருக்கும் நிலைக்கு அது வெறுப்பானது; ஆனாலும் நீ அதனை அறிய வேண்டுமென்று அவாப் படுதலால் சொல்லுகின்றோம்; சொல்லக் கேட்கும்போது பயப்படாதே, கவலைப்படாதே உலகம் பலவிதமென்பதை மாத்திரம் விளங்கக்கொள்; நீ தனியே இருந்து கேட்கவொண்ணாது குழந்தாய்; உன் தாயாரையும இங்குஅழைத்து வந்து உடனிருந்து கேட்கச்செய்" என்று அந்தப் பெரியார் சொல்ல, உடனே புவனம் போய்த் தங்கள் தாயை அழைத்து வந்து மெல்ல விஷயத்தைச் சொல்லிச் சுவாமியார் முன் இருக்கச் செய்து தானும் இருந்தாள். சாமியார் தம் பழைய வரலாற்றை ஆதியோடந்தமாகச் சொல்வாராயினர். (வரும்.)

# இந்தியாவில் மலிவான ஜவுளிகள்

விலைகள் மிகக்குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது

இந்தியாவிலுள்ள ஜவுளிக்கட்டுப் பாட்டுச்சபை சகல ரக ஜவுளிகளின் விலைகளையுங் கட்டுப்படுத்தத் தீர்மானித்திருக்கிறது. அதனோடு நூல் விலைகளும் கட்டுப்படுத்தப்படவிருப்பதாகத் தெரிகிறது.

ஆகஸ்ட் ௴ 31-ந் திகதி ஜவுளிக் கொம்மிஷனர் 12 ரக ஜவுளிகள், நூல்கள் ஆகியவற்றின் சிறந்த ரகங்களின் விலைகளைக் கட்டுப்படுத்தி ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தார். புதிய உத்தரவு செல்லுபடியாகவுள்ள ஏனைய ரகங்களினதும் கட்டுப்பாட்டு விலைகளும் குறித்த 12 ரகங்கள் விஷயத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலைகளை ஒத்திருக்கும்.

இவ்வருடம் டிசம்பர் ௴ முதலாந் திகதியிலிருந்து ஜவுளிகள் நூல்கள் ஆகியவற்றின் கட்டுப்பாட்டு விலைகளையுங் குறைக்க ஜவுளிக் கட்டுப்பாட்டுச்சபை தீர்மானித்திருக்கிறது. இவ்விலைகள் மூன்று மாதத்துக்கொருமுறை திருத்தியமைக்கப்படும்.

ஆலைகளோ ஜவுளிகள் அல்லது நூல்களின் மொத்த விலைகளையும் சில்லறை விலைகளையும் ஜவுளிகளிற் கட்டாயமாக முத்திரையிடவேண்டுமென்னும் உத்தரவொன்றையுங் கட்டுப்பாட்டுச்சபை பிறப்பிக்கவிருக்கிறது.

புதிய கட்டுப்பாட்டு விலைகள் முந்திய கட்டுப்பாட்டு விலைகளைவிடக் குறைவாக இருக்குமென்றும், புதிய விலைகள் நவம்பர் மாதம் கடைப்பகுதியில் வெளியிடப்படுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

டிசெம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து புதிய கட்டுப்பாட்டு விலைகள் ஜவுளிகளிலும் நூல்களிலும் அச்சிடப்படுவதோடு இப்போதைய விலைகளில நூற்றுக்கு 30 விகிதம் குறைவாகவாவது ஜவுளிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்குமென்று ஜவுளிக் கட்டுப்பாட்டுச் சபைத்தலைவர் கூறுகிறார்.

இப்பொழுது இந்தியாவில் இருக்கும் ஜவுளிகள் நூல்கள் ஆகியவற்றின் கையிருப்புகள் எட்டுமாத காலத்துக்குப் போதியனவென்று அதிகாரிகள் சேகரித்துள்ள புள்ளிவிபரங்களிலிருந்து தெரியவந்திருக்கிறது. யுத்தத்திற்கு முன்னர்ச் சாதாரணமாக ஏறக்குறைய 3 மாதக் கையிருப்பு மட்டுமே மேல் மிச்சமாக இருப்பதுண்டு.

# பட்டினசபைக்கு மீண்டும் கோரமில்லை

யாழ்ப்பாணம் பட்டினசபைக் கூட்டம் சென்ற வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிச் சொற்பநேரம் விவாதம் நடைபெற்றபின், திரு. பதிராஜா ஒரு பிரேரணைபற்றிப் பேச ஆரம்பித்தார். தலைவர் அதை ஆக்ஷேபித்து, பிரேரணை ஒழுங்கற்றதென்று தீர்மானிக்கவே குறித்த அங்கத்தவர் சபையை விட்டு வெளியேறினார். எனவே, கோரமில்லாமை காரணமாகக் கூட்டம் பின்போட்டு வைக்கப்பட்டது.

இதற்கு முன்னரும், தலைவர் கூட்டிய இரு விசேஷ கூட்டங்கள் கோரமில்லாமை காரணமாக நடைபெறத் தவறின.

# திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

## வெள்ளி ஒக் 15

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 சந்தன் சரித்திர கீர்த்தனைகள் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 தஞ்சாவூர் ஜானகி பாட்டு 9 முடிவு.

1கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 தஞ்சாவூர் ஜானகி அம்மாள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 எம் ஜி நாகோஜிராவ் பாட்டு 5-40 தூரான்-ஷரீப் 6 செம்பொன்னார் கோவில் ஆர் ஜி குஞ்சிதபாதம் பிள்ளை ஆர் கிருஷ்ணமூர்த்தி பிள்ளை நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கியவாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 ஜயம் 8 செம்பொன்னார்கோவில் ஆர் ஜி குஞ்சிதபாதம்பிள்ளை ஆர் கிருஷ்ணமூர்த்திபிள்ளை நாகஸ்வரம் 8-45 எம் ஜி நகோஜிராவ் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 உலகவிவகாரங்கள் 10படப்பாட்டுகள் † 10-30 முடிவு.

## சனி ஒக் 16

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 அருணாசல முதலியார் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி டி சங்கரய்யர் வயலின் 9 முடிவு.

1 எஸ் விஸ்வநாதன் பாட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 தாலவகை † 2 தமிழில் செய்திகள் 2-05 டி டி சங்கரய்யர் வயலின் 2-30 முடிவு.

மாலை 5 எஸ் விஸ்வநாதன் பாட்டு 5-40 அழகர் அந்தாதி விளக்கம் 6 திரைகானம் † 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 புத்தக விமர்சனம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 மதராஸ் 1ல் உள்ளபடி முசிரி சுப்ரமணிய ஐயர் பாட்டு 9-15 மாயாபஜார் † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ராகமாலிகை † 10 கண்ணன் பாலலீலைகள் 10-30 முடிவு.

## ஞாயிறு ஒக் 17

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 இரு தாலிசை † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஸ்ரீரங்கம் எம் ராமசாமி ஐயங்கார் வீணை 9 முடிவு.

12- கதம்பம்† 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 ஏ ராமகிருஷ்ணன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 இசைக்கதம்பம் † 2-30 முடிவு.

மாலை 5 ஏ ராமகிருஷ்ணன் பாட்டு 5-40 தேவாரநாதனை 6 ஸ்ரீரங்கம் எம் ராமசாமி ஐயங்கார் வீணை 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 நம் தொழிலாளர்களுக்கு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 எங்கள் தபால்பெட்டி 8 ஸ்ரீ வெங்கடேச கலியாணம் 9 சர்வகலாசாலைகளுக்கு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 வில்லி பாரதம் 10 இசைவேளை † 10-30 முடிவு.

## திங்கள் ஒக் 18

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 சித்தாய்மூர் எம் பாலசுந்தரம் நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம் †1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஸி சங்கரம்பிள்ளை பாட்டு 2 தமிழில் செய்திகள் 2—05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 சித்தாய்மூர் எம் பாலசுந்தரம் நாகஸ்வரம் 5-45 இசைப்பயிற்சி 6 ஸி சங்கரலிங்கம்பிள்ளை பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 கரும் வைரம் சிறுகதை 8 மதுரை மணிஐயர்பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 அப்துல் கனி 10-05 டெல்லி அஞ்சல் 10-30 முடிவு.

# சங்கீத நாட்டியக் கலைப் பரீக்ஷைகள்

## ஏற்பாடுசெய்யக் கல்வியதிகாரிகளின் ஆலோசனை

சங்கீதம் நாட்டியம் ஆகிய கலைகளைப் போதிக்கும் ஆசிரியர்களின் பரீக்ஷையொன்றை நடத்துவது பற்றியும் சம்பந்தப்பட்ட பரீக்ஷையில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல்வகுப்பு ஆசிரியர் தராதரப் பத்திரம்போன்ற ஒன்றை வழங்குவது பற்றியும் கல்வி அதிகாரிகள் ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

அகில இலங்கை ஆசிரியர் சங்கம் நிறைவேற்றிய தீர்மானமொன்றுக்கு வித்தியாகர்த்தர் அளித்துள்ள பதிலிலிருந்து இவ்விபரம் வெளியாகியது.

சங்கீதம் நாட்டியம் முதலிய கலைகளில் ஈடுபட்டுவரும் ஆசிரியர்கள் இக்கலைகள் சம்பந்தமாக உயர்தரக்கல்வி பயிலுவதற்கும் பயிற்சி பெறுவதற்கும் வசதி ஏற்படுத்த வேண்டுமென்றும் சாந்திநிகேதனம் போன்ற கல்வி ஸ்தாபனங்களில் தேர்ச்சியாகப் பயிற்சி பெற்றவர்களின் தாரதரப்பத்திரம் [illegible] வேண்டுமென்றும் அந்த சங்கம் வற்புறுத்துகிறது.

தமது நிர்வாகத்துக்குட்படாத ஸ்தானங்களிற் பயிற்சியைப் பூர்த்தி செய்யும் ஆசிரியர்களுக்குத் தராதரப் பத்திரங்களை வழங்குவதற்கில்லையென்று வித்தியாகர்த்தர் குறிப்பிட்டிருக்கிறார்.

### பாடப்புத்தகக் கஷ்டம்

பரீக்ஷைகள் சம்பந்தமான பாடப்புத்தகங்கள், ஆசிரியர் பட்டப்பரீக்ஷை, பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கு வேலைகொடுத்தல் முதலிய விஷயங்கள் பற்றிய தீர்மானங்களுக்கும் வித்தியாகர்த்தர் பதிலளித்திருக்கிறார்.

இப்போதைய நெருக்கடியை முன்னிட்டு ஜே. எஸ். ஸி., எஸ். எஸ். ஸி., எச். எஸ். ஸி. பரீக்ஷைகளுக்குரிய பாடப்புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளக் கல்விப்பகுதியே ஏற்பாடு செய்யவேண்டுமென்று சங்கம் சிபார்சு செய்தது. இலங்கைப் பரீக்ஷைகள் சம்பந்தப்பட்டவரை பழைய புத்தகங்களையே பாடப்புத்தகங்களாக நியமிப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருவதாக வித்தியாகர்த்தர் கூறுகிறார். இப்பொழுது புத்தகங்கள் இந்தியாவிலிருந்தே இறக்குமதியாகி வருவதால் புத்தக விலைகளை மிகவும் கட்டுப்படுத்த முயன்றால் 'சப்ளை' கிடைக்காமற் போய்விடக்கூடுமென்று அவர் குறிப்பிடுகிறார்.

ஆசிரியர் பட்டப்பரீக்ஷை விஷயத்திற் கொள்கையை மாற்ற உத்தேசமில்லையென்று வித்தியாகர்த்தர் பதிலளித்திருக்கிறார்.

பயிற்சிபெறும் ஆசிரியர்கள் பாடசாலைகளில் வேலை தேடிக்கொள்ளும்பொருட்டு, சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களின் நிர்வாகஸ்தரோடு ஏற்பாடு செய்துகொள்ள வேண்டுமென்று வித்தியாகர்த்தர் தெரிவித்திருக்கிறார்.

**பல் வைத்தியம்**
**யாழ்ப்பாணம்**

பல் வைத்தியம் செய்யவும் கண் பரிசோதனை செய்யவும் தத்துவம்பெற்றவரான திரு. எஸ். சாள்ஸ் சந்திருஜு அவர்கள் வருஷத்தின் எல்லா மாசங்களிலும் 3-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரையும் யாழ்ப்பாணம், பெரிய தெரு 43ம் இலக்கத்திலுள்ள வைத்திய சாலையில் கருமம் நடாத்துவார்.

**குருநாகல் கிளைஸ்தாபனம்**
மாசத்தின் 20ந் திகதியிலிருந்து 30-ந் திகதி வரையும் குருநாகல் கோட்டுவீட்டுக்கு முன்னுள்ள பல்வைத்திய கிளைஸ்தாபனத்தில் கருமம் நடாத்துவார்.

யாழ்ப்பாணத்தில் அவரிடம் வைத்தியம் செய்விப்போர் முன் ஒழுங்குகள் செய்யவேண்டில் அவருடைய குருநாகல் விலாசத்துக்கு எழுதுதல் நல்லது.
(Mis. 98. 5.8—31.12.43)

# வட்டுக்கோட்டை ஸ்ரீ ஆனந்த சங்கீத சபாவினரின் கீர்வாணிவிழா

மேற்படி விழாவானது நிகழும் சுபானு வருஷ புரட்டாதி மீ 17ந் திகதி ஞாயிற்றுக்கிழமையும் (3-10-43) அதற்கடுத்த தினமான திங்கட்கிழமையும் ஆகிய இரு தினங்களில் ஸ்ரீ மங்களாம்பிகாசமேத மகாலிங்கேஸ்வரஸ்வாமி தேவஸ்தான மண்டபத்தில் நடைபெற்றது. முதலாவது தினமான ஞாயிறன்று மாலை 6 மணியளவில் விழா ஆரம்பமானது.

முதலாவதாக மேற்படி சபாவின் அங்கத்தினர்களான மாஸ்டர் A. கணேசனும், இரண்டாவதாகச் செல்வி A. வாலாம்பிகையும் வாய்ப்பாட்டுப் பாடினர். பக்கவாத்தியங்களாக திரு. K. சண்முகானந்தம் வயலினும், திரு. M. நாகலிங்கம் மிருதங்கமும், பிரபல தவில் வித்வான் திரு. V. N. காமாக்ஷிசுந்தரம் கெஞ்சிராவும் வாசித்தனர்.

மூன்றாவதாகப் புகழ்பெற்ற ஆசிரியர் திரு. K. சண்முகானந்தம் அவர்களின் தனிவயலின் கச்சேரி நடைபெற்றது. அவரது வாசிப்பில் எல்லோரும் லயித்து ஆனந்தமெய்தினர்.

நான்காவதாக மேற்படி சபாவின் கௌரவ ஆசிரியர் ப்ரம்மஸ்ரீ P. வைத்தியநாதசர்மா அவர்களின் தனிவயலின் கச்சேரி நடைபெற்றது. பக்கவாத்தியங்களாக பிரபல வித்வான் திரு. V. N. காமாக்ஷிசுந்தரம் கெஞ்சிராவும், திரு. M. நாகலிங்கம் மிருதங்கமும் வாசித்தனர். அவரது இன்பக்கானம் யாவரையும் வசீகரப்படுத்தியது.

### இரண்டாம் நாள் விழா

இரண்டாம் தினமான திங்கட்கிழமை (4-10-43) யன்று 6 மணியளவில் விழா ஆரம்பமாயது. அன்று ப்ரம்மஸ்ரீ. C. S. S. மணிஐயர் அவர்கள் 'மஹிஷாசுரமர்த்தனம்' எனும் விஷயம்பற்றி ஓர் இனிய சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்தினர்.

பக்கவாத்தியங்களாக ப்ரம்மஸ்ரீ. P. வைத்தியநாத சர்மா அவர்கள் வயலினும், ப்ரம்மஸ்ரீ R. மூர்த்திஐயர் ஹார்மோனியமும், திரு. V. N. சின்னத்துரை மிருதங்கமும் வாசித்தனர். அவரது பக்திப் பெருக்கும், இனிய பொருட்சுவை நிறைந்த வசனங்களும் சங்கீத ஞானம் மிகுந்த பாக்களும் எல்லோரையும் மகிழ்வித்தன.

இரண்டாவதாக ப்ரம்மஸ்ரீ. R. மூர்த்திஐயர் அவர்களது வேணுகானக் கச்சேரி நடைபெற்றது. பக்கவாத்தியங்களாக ப்ரம்மஸ்ரீ P. வைத்தியநாத சர்மா அவர்கள் வயலினும், பிரபல தமிழ் வித்வான் திரு. V. K. காமாக்ஷிசுந்தரம் கெஞ்சிராவும் வாசித்தனர்.

இவ்விதம் நடைபெற்ற விழாவானது அன்று இரவு சுமார் 11 மணியளவில் இனிதே முடிவுற்றது.

—[illegible]

# அறிவித்தல்

## வியாபாரி அல்லாதவர்கள் தங்கள் உபயோகத்திற்காக ஏற்றுமதி இறக்குமதி செய்தல்

1 ஏற்றுமதி இறக்குமதி செய்தலைக் கட்டுப்படுத்தியுள்ள பாதுகாப்பு விதிகளை வியாபாரி அல்லாதவர்கள் மீறி நடப்பது குறைந்துகொண்டு வருவதாகத் தெரியவில்லை. எனவே, இன்னும் அதிக கடினமாகக் கட்டுப்பாடுகளைச் செலுத்த வேண்டியதாயிருக்கிறது.

2 ஆகையால் தபால் மூலமேனும் சிநேகிதர்கள் மூலமேனும் வெளிநாடுகளிலிருந்து உத்தரவுப் பத்திரமில்லாது சரக்குகளை வரவழைத்தல் அல்லது இலங்கையிலிருந்து சரக்குகளை அனுப்புதல் ஒழுங்கான முறையல்லவென்று பொதுச்சனங்கள் எச்சரிக்கை செய்யப்படுகிறார்கள். இங்கே குறைவாயுள்ள சரக்குகளை இந்தியாவிலிருந்து கொண்டுவரக்கூடாது. மேலும் வியாபாரத்தில் மிகத்துரமான அந்தலையிலிருக்கும் இலங்கையில் கிடைக்கக்கூடிய மட்டுமட்டாகப் போதிய சரக்குகளை இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்புவது சரியான செயலன்று.

3 உத்தரவுப் பத்திரமின்றி ஏற்றுமதி செய்யப்படும் அல்லது இறக்குமதி செய்யப்படும் சரக்குகள் சுங்கப் பகுதிச் சட்டத்தின்படி பறிமுதல் செய்யப்படக்கூடும். எச்சரிக்கை செய்து அனுப்பியவருக்கே இதுவரை திருப்பியனுப்பி வந்ததுபோல, சரக்குகள் சாதாரணமாகத் திருப்பியனுப்பப்படமாட்டா. ஒருவர் வேணுமென்று இக்கட்டுப்பாட்டினின்றும் உபாயமாக விலகிக்கொள்ள முயற்சித்தால் அவர் தெண்டமிறுத்தற்கு அல்லது அவர்மீது வழக்குத் தொடர்தற்குப் பாத்திரராவர்.

4 வரவழைத்தற்கு உத்தரவுப் பத்திரம்பெற விண்ணப்பஞ் செய்வோர் இறக்குமதி அதிகாரிக்கு எழுதல் வேண்டும். ஏற்றுமதி உத்தரவுப் பத்திரத்திற்கு ஏற்றுமதி அதிகாரிக்கு விண்ணப்பஞ் செய்தல் வேண்டும். அல்லது உடுப்புத்துணிகள் அல்லது வேறு ஜவுளிகள் விஷயத்தில் கட்டுப்பாட்டதிகாரிக்கு விண்ணப்பஞ் செய்தல் வேண்டும்.

5 இனமாக சந்தோஷத்தின் பேரில் அனுப்பப்படும் சிறு சாமான்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டால் இதுவரை நடந்ததுபோலவே விடப்படும்.

எச். எஸ். எம். ஹோர்
பதிற்சுங்க அதிகாரி

இல. G 21,
அரசாங்க சுங்கப்பகுதி
கொழும்பு, 1943-ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 18-ந் தேதி

G 27—14-10-43

**தேவை**

கொட்டடி ஐக்கிய பண்டக சாலைக்கு ஒரு மனேஜரும் ஒருவிற்பனவுகாரனும் தேவை.

| | |
|---|---|
| மனேஜருக்கு சம்பளம் | 50 — ரூபா. |
| விற்பனவு காரனுக்கு | 20 — ரூபா. |

மனேஜர் ஆக வருபவர் ரொக்கப் பிணை ரூபா 500—. அல்லது ஆதனப் பிணை ரூபா 1000— கட்ட வேண்டும்.

இந்த மாதம் 20-ந் தேதிக்கு முன் விண்ணப்பம் அனுப்புக.

இங்ஙனம்,
நா. அமிர்தலிங்கம்,
காரியதரிசி

Mis—135. 11, 14-10-43.

**புதிதாக வந்துள்ள தினிசுகள்**

அச்சிட்ட பருத்தி வொயில் சேலைகள்
சேலம், கோயம்புத்தூர்ச் சேலைகள்
சகலவிதமான சந்தர்ப்பங்களுக்கும் தகுதி வாய்ந்தது.

**கட்டுப்படுத்தப்பட்ட விலைகளில்**

பெனரிஸ்சேலைகள், பட்டுகள், ரிஸ்யூக்கள்,
பங்களூர், காஷ்மீரச் சுத்தமான பட்டுச்சேலைகள்.

ஓரளவு ஸ்டாக்குகளே இருக்கின்றன.
...விரைவில் வாங்கிக்கொள்ளுங்கள்...

**யாழ்ப்பாணம் அப்போதிக்கரீஸ்கம்பனி.**
(Mis. 124, 30-9-43—7,14-10-43)

**அறிவித்தல்**

குழந்தைகளுக்குக் காத்திராப்பிரகாரம் உண்டாகும் மாந்தம், இருமல், கிரந்தி காய்ச்சல் ஆதிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற மருந்துகள் எம்மிடம் ஏராளமாயுண்டு.

குளிர்சுரம் (மலேரியா) இருமல், உஷ்ணச்சூடு, வாதம், கிரந்தி, நரம்புப் பெலவீனம், மலடு ஆகிய நோய்களைத் தீர்க்கும் கீழ்க்கண்ட மருந்துகள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அயக்குழம்பு, சென்னகரம்பழநெய், காந்தபஸ்பம் வெள்ளைகுப்பஸ்பம், அமுதசர்க்கரை, கிரந்திக்குளிகை, பெருங்கிரந்தி எண்ணெய், கோட்டைச்சந்தனாதி எண்ணெய், மகாசஞ்சீவி மாத்திரை, கோரோசனை மாத்திரை, அயசெந்தூரம்.

சில்லாலைமுத்துவைத்தியசாலை, 160, மேல்வீடு, பெரியதெரு, யாழ்ப்பாணம்.
வைத்தியர்: அ. செபஸ்தியாம்பிள்ளை.
(Q. 30, 11-5-43—10-11-43)

**குறைந்த விலையில் துணிகள்**

ஷேட்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

**R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்**
மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்
பெரியகடை—யாழ்ப்பாணம்.

K. A. இரத்தினசிங்கம்,
பங்காளர்.

Y 19. 4-3-42——3-3-44

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday 14, October, 1943.